Written by
Saturday, 16 August 2008 16:58 -

எந்த விஷயத்தாக்கும் கொள்கைகளுடன் அனுபவ ஞானமும் இருந்தால்தான் அதை மனிதத்தன்மை என்று சொல்லலாமே ஒழிய, மற்றபடி அனுபவ சாத்தியத்தாக்கு இணங்காத கொள்கைகள் எதுவானாலும் அதைப் பூஸ்தகப் பூச்சி என்றுதான் சொல்ல வேண்டும்; அல்லது வறெும் அபிப்பிராயத்தாக்கு மாத்திரம் பறெுமானவர்களே ஒழிய, காரியத்திற்கும் பறெுமானவர்கள் அல்ல என்று சொல்ல வேண்டும்.

வளிெப்படையாய் நாம் பசேுவதானால், அம்பதே்கரும், அவரைப் பின்பற்றுவாரும் நாஸ்திகர்களாவதற்கும், மதமில்லாதவர்கள் ஆவதற்கும் இஷ்டமில்லாமல், அவர்கள் மீ து இருக்கும் தீ ண்டாமை மாத்திரம் ஒழிய வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்காக முகமதியராகி விடலாம் என்று அவர்கள் கருதினால், அதில் நமக்கு இருக்கும் ஆட்சபேனை என்ன என்று கடே்கின்றோம்.

முகமதிய மதத்தில் பல கடெுதிகள் இருக்கலாம்; கரோஷம் இருக்கலாம்; கடவுள் இருக்கலாம்; மூடநம்பிக்கை இருக்கலாம்; மதச் சின்னம், மதச் சடங்கு இருக்கலாம்; சமதர்மமில்லாமலும் இருக்கலாம். இதலெல்லாம் யாருக்குக் கூடாது? சுயமரியாதகைாரருக்கு கூடாததாய் இருக்கலாம். மற்றும் பணெ்ணுரிமை மாத்திரம் பணேுவாருக்கு முகமதிய மதம் வணே்டாததாய் இருக்கலாம்; மூடநம்பிக்கை அனுஷ்டிக்காதவர்களுக்கும் முகமதிய மதம் வணே்டாததாய் இருக்கலாம்; மதவஷேமும் பயனற்ற சடங்கும் வணே்டாதவருக்கு முகமதிய மதம் வணே்டாததாய் இருக்கலாம்; நாஸ்திகர்களுக்கும், பகுத்தறிவுவாதிகளுக்கும் முகமதிய மதம் வணே்டாததாய் இருக்கலாம்; சமதர்மவாதிகளுக்கும், பொதுவுடமைகை்காரர்களுக்கும் முகமதிய மதம் வணே்டாததாய் இருக்கலாம்.

ஆனால், தீ யர்கள், பறயைர்கள், பூலயைர்கள், நாயாடிகள் என்று அழகை்கப்படுகின்ற ஓதுக்கப்பட்டிருக்கின்ற, தாழ்த்தப்பட்டு கொடுமபை்படுத்தப்பட்டு, நாயிலும், மலத்திலும், பூழுத்த விஷக்கிருமிகளிலும் கவேலமாக மதிக்கப்பட்டு வருகிற மக்களிடம் தங்கள் மீ து இருக்கும் தீ ண்டாமை மாத்திரம் ஒழிந்தால் போதும் என்று கருதிக்கொணெ்டிருக்கும் மக்களிடம் நமக்கு வலேை உண்டா இல்லையா என்று கடே்கின்றோம்.

ஏனனிெல், அவன் கிறிஸ்தவனாகி, கிறிஸ்தவப் பறயைன், கிறிஸ்தவச் சக்கிலி, கிறிஸ்தவ பிள்ளை, கிறிஸ்தவ நாய்க்கன் என்று தீ ண்டாதவனாகவே இருப்பதவைிட, பறத்தூலுக்கன் என்றோ, சக்கிலிய முகமதியன் என்றோ, தீ ய முஸ்லிம் என்றோ அழகை்க இடமில்லாமலும் அழகை்கப்படாமலும் இருக்கும்படியான நிலயைிலும் மற்றசம்கக்காரர்களோ மதக்காரர்களோ அவ்வளவு சூலபமாக இழிவுபடுத்தவோ, கொடுமயைாய் நடத்தவோ முடியாத சுயமரியாதை அனுபவமும் உள்ள நிலயைிலும் இருக்கும் ஓரு மதத்திற்கு, "எப்படியாவது தீ ண்டாமயைை ஒழித்துக் கொள்ள வணே்டும்" என்கின்றவன் போனால், இதில் சுயமரியாதகை்காரனுக்கு என்ன நஷ்டம் என்று கடே்கின்றோம். அன்றியும், "சரி, எப்படியாவது சீ க்கிரத்தில் தீ ண்டாமயைை ஒழித்துக் கொள்" என்று சொல்வதிலும் என்ன தப்பு என்றும் கடே்கின்றோம்.

நமக்குக் கடிதம் எழுதின நண்பர், "இந்து மதத்தில் தீ ண்டாமை இருக்கிறது; இஸ்லாம் மதத்தில் பாரக்காமை இருக்கிறது; பணெ்களுக்கு உறை போடடு மூடிவதை்து இருக்கிறார்கள்" என்று எழுதி இருக்கிறார். அது (உறை போடடு வதை்திருப்பது)

Written by
Saturday, 16 August 2008 16:58 -

உண்மை என்றும், தவறானது என்றுமே வதை்தாக் கொள்ளுவோம். இது, பெண்ணுரிமை பேணுவோர்கள் கவனிக்க வேண்டிய காரியமே ஒழிய, தீண்டாமை விலக்கு மாத்திரம் வேண்டும் என்று கருதுகின்றவர்கள் யோசிக்க வேண்டிய காரியம் அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இந்து மதம் சீர்திருத்தம் அடைந்து வருகிறது என்றும், தீண்டாமை ஒழிக்கப்பட்டு வருகிறது என்றும், சில மடர்களும், சழ்ச்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள். அதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இந்து மதம் சீர்திருத்தமடைந்து வரவில்லை; இந்து மதம் ஒழிந்து வருகின்றது என்றுதான் சொல்லுவோம். இந்து மதத்தில் சீர்திருத்தத்திற்கு இடமில்லை; அதசை் சீர்திருத்தம் சயெ்ய யாருக்கும் அதிகாரமும் இல்லை. இந்து மத ஆதாரங்கள் என்பவை அம்மத வதேம், சாஸ்திரம், புராணம் என்று சொல்லப்படுபவகைளை் பொறுத்ததே ஒழிய, சாமிகள் என்றும், மகாத்மாக்கள் என்றும், தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள்ளும் சில விளம்பரப் பிரியர்களை் பொறுத்தது அல்ல.

இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு அனுகூலம் சயெ்ய, சில தீவிர சுயமரியாதகை்காரர்கள் என்று தங்களசை் சொல்லிக் கொள்ளுகின்றவர்கள், அம்பதே்கர் வறேு மதத்துக்கு்ப் போவதை அனுமதிக்கக் கூடாது என்றால் அது நியாயமாகுமா? அல்லது ஒன்றும் பசோமல் சும்மா இரு என்பதுதான் நியாயமாகுமா? ஆதலால், அம்பதே்கருடயை மூடிவை நாம் மனமார ஆதரிப்பதுடன், அம்மூடிவுப்படி சரியான சயெலுக்கு நம்மாலான உதவியளிக்க வேண்டியதும் ஓவ்வொரு சுயமரியாதகை்காரருடயைவும் கடமையாகும் என்பது நமது அபிப்பிராயம்.

(17.11.1935 "□□□□ □□□□' □□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□)

http://www.keetru.com/rebel/periyar/6.php